DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 511/2016

List of Witness : Lw2

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்துச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | செல்வக்குமார் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 10/04/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கே.டிபாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 செல்லமுத்து என்பவரை எனக்கு தெரியும். கடந்த 28.08.2016 ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் மூலனூர் – கள்ளிமந்தையம் ரோட்டில் தண்ணீர் பந்தல் அருகே நானும், செல்லமுத்து என்பவரும் ராமசாமி என்பவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது மூலனூர் ரோட்டில் வடக்கே இருந்து தெற்காக கார் ஒன்று வேகமாக வந்தது. அதே ரோட்டில் தெற்கு இருந்து வடக்கு நோக்கி கல்பனா என்பவர் சூப்பர் XL ஓட்டிக்கொண்டும் அதில் அவரது மாமியார் பொன்னாத்தாளும், கல்பனாவின் மகளும், மகனும் TVS XL –லில் உட்கார்ந்து கொண்டு வந்தார்கள். மேற்படி கல்பனா தெற்கேயிருந்து வந்து கிழக்கு நோக்கி கே.டி.பாளையம் ரோட்டில் திரும்பும்போது வடக்கே இருந்து வந்த மாருதி ஜென் கார் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி கல்பனாவின் இருசக்கர வாகனத்தில் வந்த கல்பனாவுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு கிடந்தார். பொன்னாத்தாளுக்கு தலையிலும், காலிலும், காதிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. காதில் ரத்தம் வந்தது. எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது. கல்பனாவின் மகன் சந்திராஆதித்யாவிற்கு தலையில் பலத்த காயமும், சிராய்பு காயமும் ஏற்பட்டது. கல்பனாவின் மகளுக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டு இருந்தது. மேற்படி விபத்தை நேரில் பார்த்தேன். விபத்தை ஏற்படுத்திய ஜென் நான்கு சக்கரவாகனத்தின் ஓட்டுநரின் நான் நேரில் பார்த்தேன்.அவர் பெயர் குப்பமுத்து. அவர் கள்ளிமந்தையம் திருப்பதி அருள்நெறி மேல்நிலைப்பள்ளி ஆசிரியர். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். மேற்படி விபத்துக்கு காரணம் காரை ஓட்டிவந்த நபர் வேகமாக ஓட்டிவந்து கவனக்குறைவாக

மோதியதால் விபத்து ஏற்பட்டது. மாருதி ஜென் வாகனத்தின் பதிவெண் TN 09 6738 ஆகும். இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 57 3780 ஆகும். மேற்படி விபத்து ஏற்பட்ட பிறகு ஒரு போக்குவண்டி மூலம் காயம்பட்ட நபர்களை ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துமனைக்கு சிகிச்சைக்கு நானும், செல்லமுத்து, ராமசாமி ஆகியோர்கள் கொண்டு சேர்த்தோம்.

(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.10 17:52:39 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/04/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 511/2016

List of Witness : Lw3

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராமசாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | தங்கவேல் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 10/04/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அம்பிளிக்கையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்லமுத்து என்பவரை எனக்கு தெரியும். கடந்த சுமார் 10,12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் கூலி வேலைக்காக கே.டி.பாளையத்திற்கு சென்றிருந்தபோது கே.டி.பாளையம் பஸ் ஸ்டாப் அருகே கள்ளிமந்தையம் – மூலனூர் ரோட்டில் நின்றிருந்தபோது வடக்கே இருந்து வேகமாக வந்த கார் எக்ஸ்.எல். இருசக்கர வாகனத்தின் மீது மோதி டம் என்று சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் நான்கு பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது. இருசக்கர வாகனம் தெற்கு இருந்து கள்ளிமந்தையம் – மூலனூர் ரோட்டில் வந்தது. பின்னர் காயம்பட்டவர்களை ஒரு போக்கு வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுனரை தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி விபத்திற்கு காரணம் கார் மோதி விபத்தை ஏற்படுத்தியது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முத்துச்சாமியும், நானும் தான் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். செல்லமுத்து சம்பவம் நடந்த பின்னர்தான் வந்தார் என்றால் சரிதான். சம்பவத்தின் போது டம் என்று சத்தம் கேட்டு பார்த்தேனா என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் நால்ரோடு என்றால் சரியல்ல,

நால்ரோடு தாண்டி 100 மீட்டருக்கு அப்பால் சம்பவம் நடந்தது. இருசக்கர வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் நான்கு பேர் காயம் அடைந்து இருந்தார்கள். இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்துகுள்ளான காரை யார் ஓட்டிவந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் நாளது தேதியில் விபத்து சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், செல்லமுத்து எனது நண்பர் என்ற காரணத்தினாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.10 17:52:46 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/04/2026